பத்திராதிபர்:—எஸ். ஜி. இராமாநுஜ சாஸ்திரி. Regis. No. M. 423.



பிரஜாநுகூலன்

பிப்ரவரி 1931.

VOL. 23 PRAJANUKOOLAN No 2

விஷயங்கள்.

வருஷ சந்தா ஒரு ரூபாய்.
வெளிநாடு 1-4-0.
தனிச் சஞ்சிகை அணா. 2.

பிரஜாநுகூலன் [illegible]

சந்தாதாரர்களுக்கு அறிக்கை.

இந்தப் பிப்ரவரி மாத ஸஞ்சிகையைப் பெற்றவுடன் மறுவாரத்தில் அவர்களுக்கு வி. பி. வரும், அதற்கு இந்த அறிக்கையையே முன்னறிவிப்புக் கார்டுபோலப் பாவித்து, வி. பி. வந்த க்ஷணமே ஒப்புக் கொள்ள வேண்டுகிறோம். புது தபால் விதிப்படி வி. பி. வந்த மூன்று தினங்களுக்குள் பெற்றுக்கொள்ள வேண்டும். பத்திரிகையின் தாமதத்தைப் பொருட்செய்யாமல், பத்திரிகையிலுள்ள உத்தம விஷயங்களைமட்டும் நினைத்துப் பார்த்து, வி.பி. வந்தவுடன் அன்போடு ஒப்புக்கொள்ள வேண்டுகிறோம்.

☞ நமது அன்பர்கள் பதில் விரும்பினால் ரிப்ளை கார்டாவது ஸ்டாம்பாவது அனுப்பவேண்டும். அவ்விதமின்றிக் கார்டுமட்டும் அனுப்பிவிட்டு, நாம் பதில் எழுதவில்லையென வருந்துவது தர்மமல்ல. பத்திரிகை தாமதமானாலும் சீக்கிரம் கிடைத்துவிடும். இதற்காகக் கடிதம் எழுதவேண்டியதில்லை.

பத்திராதிபர்.

“பிரஜாநுகூல”னுக்கு நன்கொடை.

நேமுத்துப்பட்டி ஸ்ரீமான் வி. வி. என். நாராயணன் செட்டியாரவர்கள் “பிரஜாநுகூலன்” பத்திரிகைக்கு நன்கொடையாக அனுப்பிய ரூபாய் பதினைந்தையும் வந்தனத்துடன் வரப்பெற்றுக் கொண்டோம். மெஸ்தர் செட்டியாரவர்கள் “ஆநந்தகதா கல்பக”த்தின் பல வால்யங்களையும் பெற்று ஒரு சிலாக்கியமான கடிதமும் எழுதியிருக்கின்றார்கள். உத்தம திருஷ்டியுடைய பெரியோர்கள் பிறர்செய்யும் சிறு விஷயங்களையும் கவனித்து அபிமானித்து அதற்றின் விருத்திக்கு நன்கொடைகளும் கொடுத்து உத்ஸாகப்படுத்துகின்றார்கள். மெஸ்தர் நாராயணன் செட்டியாரவர்களைப் போன்ற பரோபகாரர்களால்தான் “பிரஜாநுகூலன்” இந்த 25 வருடங்களாக நடைபெற்று வருகின்றதென்பதையும் இங்கு குறிப்பிட விரும்புகின்றோம்.

பத்திராதிபர்.

பிரபஞ்ச விலாஸம்

1. நூலாசிரியர்களும், பத்திராசிரியர்களும் தங்கள் படிப்பின் திறமையால் எழுதுவதாயிருந்தாலும், அவர்கள் தங்களுக்குள்ள உற்சாகத்திலேயே தங்களின் சக்திக்கு மீறிய காரியத்தையும் சாதிக்கின்றார்கள்; பெரிய பெரிய நூல்களையும் எழுதிவிடுகிறார்கள். 'உற்சாகமற்றுவிடினோ ஒரு வரிகூட அவர்களால் சரியாக எழுத முடியாது.

2. பிராம்மணர்களுக்குக் கொடுப்பதற்குத் தானம் என்பதில்லை. நூலாசிரியர், பத்திராசிரியர்கட்கும் செய்யும் உதவிகளும் ஆதரிப்புகளும் கடவுள்வரைக்கும் எட்டுகிற உத்தம தானங்களாகும்.

உலக அநுபவம் நிறைந்தது

[illegible]

கமலம். 25. | ஸ்ரீரங்கம் பிப்ரவரி '31' | இதழ். 2.

சாந்த லக்ஷ்மி

II

வஜ்ரவேலர் கும்பகோணம் வந்து சேர்ந்தபின்பு அதிக வார்த்தைகள் ஒன்றும் நடக்கவில்லை. கோபாலரத்தினம் சாந்தலக்ஷ்மிக்கு எல்லா விஷயங்களையும் தெரிவித்து வந்தினான். உத்தமியான சாந்தமோ தன்னால் மாமனாருக்குக் கஷ்டம் கூடாதென்றும், தான் தன் தாயாரிடம் சென்றிருப்பதாயும், தனது பிரேமபதியின் அன்பு ஒன்றைத் தவிர, வேறு எந்தச் செல்வமும் தனக்குத் தேவையில்லை யென்றும், ஆபரணங்களையும் கழற்றித் தந்துவிடுவதாயும் கூறினாள். கோபாலரத்தினம் அவளைச் சாந்தப்படுத்தி, தான் சட்ட பரீட்சைக்காகச் சென்னை சென்று பத்து தினங்களில் திரும்பிவிடுவதாகச் சொல்லிப் புறப்பட்டுச் சென்றார்.

ஃ

கோபாலரத்தினம் சென்னை சென்ற நாள் முதல் உலகப் பெருமையில் மயங்கியவராகிய வஜ்ரவேலர் தமது மருகியைக் கண்டபடி தூஷிக்க ஆரம்பித்தார். கடைசியாக ஒரு நாள் சாந்தாவின் கையில் நூறு ருபாய் நோட்டு ஒன்றைக் கொடுத்து இனி இந்த வீட்டை எட்டிப்பாராதேயென்று துரத்தினர். சாந்தலக்ஷ்மி தான் ஆறுமாதக் கர்ப்பமாக இருப்பதாயும், இனி நாஸ்கு மாதங்கள் பொறுத்துப் பிறக்கும் குழந்தையைப் பின்னுக்கு ஆட்சேபியாமல் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றும் அவ்விதம் எழுதித் தரும்படியும் கேட்டாள். வஜ்ரவேலருக்குக் கோபம் இன்னும் பொங்கிற்று. எவ்விதமேனும் தொலைந்துபோ, முனிசிபல் ஜெனன அத்தாட்சிப் பத்திரம் காட்டினால்தான் குழந்தையை ஒப்ப முடியும் என்று சொல்லிக் கோபாவேசத்தில் அவ்விதமே ஒரு கடிதமும் எழுதிக்கொடுத்து ஒரு கிழவியுடன் ரயிலேற்றி அனுப்பிவிட்டார்.

அழுத கண்ணும் சிந்திய மூக்குமாய் ரயில் ஏறிய சாந்த லக்ஷ்மி தன்னுடன் வந்த கிழவி தூங்கும் சமயம் பார்த்து நடுவில் ஒரு ஸ்டேஷனில் இறங்கி எங்கேயோ நடந்து சென்றாள். துணை வந்த கிழவி பிறகு விழித்துக் கொண்டு வண்டி முற்றும் தேடிவிட்டுப் பசுபதி கோயிலில் இறங்கிச் சாந்தாவின் பெற்றோர்களுக்கு விஷயத்தைத் தெரிவித்தாள். தாமோதரர் அந்த சமயம் தமது மூன்றுவயதுக் குமாரனுடன் கொஞ்சிக் கொண்டிருந்தவர் இதைக் கேட்டதும் திடுக்கிட்டுக் கதறினர். கமலத்தின் துயரம் சொல்லவுங்கூடுமோ? கோபாலரத்தினத்துக்கு எல்லாம் தந்திமூலம் தெரிவிக்க, அவன் ஓடி வந்து தந்தையின் செயலுக்கு வருந்தினான். சாந்த லக்ஷ்மி எங்கும் அகப்படவில்லை. எப்படியோ சீனுவின் எண்ணம் நிறைவேறிற்று.

ஃ

வஜ்ரவேலர் ஒருதினம் மோட்டார் வண்டியில் சென்றுகொண்டிருக்கையில் ஒரு சிறுவனின்மீது வண்டி ஏறிவிட்டது. கனத்த காயங்களுடன் தப்பித்துக்கொண்டான். தம்மைத் தண்டியாதிருப்பதற்காக அவன் குணப்படுவதற்கான செலவுகளை எல்லாம் தாமே செய்தார். சிறுவனின் பெயர் பாஸ்கரன். கும்பகோணத்தில் ஒரு உபாத்தியாரிடம் படிப்பதற்காக அவனை பெற்றோர்கள் விட்டிருந்தனர். அவன் தாய் தந்தையர் ரங்கூனில் இருப்பதாகப் பிரஸ்தாபம். எனவே, வஜ்ரவேலர் அவனைத் தாம் வளர்த்துக்கொள்வதாகச் சொல்ல, உபாத்தியாயரும் அதற்கு சம்மதித்தார். பாஸ்கரன் வருஷந்தோறும் ஒவ்வொரு வகுப்பாக உயர்ந்து எப். ஏ. பரீட்சைக்கு வாசித்துக்கொண்டிருந்தான். அப்போது மகாத்மாவின் பள்ளி பஹிஷ்காரம் ஏற்படவே தனது படிப்பை விட்டுவிட்டு, மகாத்மாவின் ஆசிரமத்துக்குச் சென்றான், அங்கு சேவைசெய்யும் தொழில் கற்றுக்கொண்டு ஒரு வருஷம்போல் அவ்விடமே தங்கினான். வஜ்ரவேலர் பணம் அனுப்பிவந்தார்-

மீறுசிறுவரைக்கும் மீறிப் பிறகு தன்மீறுதல்பயன்படாதெனக் கண்டதும், அவன் பரம சாதுப்போல் பூனை வேஷம் போடத் தொடங்கிவிடுகிறான். இந்தக் கபடவேஷப் பூனையின் சங்கதி தெரியாமலில்லை.

மகாத்மாவின் ஆசிரமத்தில் சரஸ்வதி என்னும் வடிதார த்னம் நூற்கும்தொழிலிலும், வித்யா வைபவத்திலும் மிகவும் தேர்ச்சிபெற்றுவிளங்கினாள். அவளும் பாஸ்கரனும் மிக்க அன்னியோன்னியமாய் விளங்கினர். நெய்தற்றொழிலிலும் கலாபிவிர்த்தியிலும் ஒருவரையொருவர் மேம்பட்டு நின்ற னர். பாஸ்கரன் ஒரு வருஷத்திற்குப் பிறகு வஜ்ரவேலரிடம் திருப்பி சரஸ்வதியைக் குறித்து விசேஷமாக எடுத்துச் சொல்லி, தன்னுடன் வந்து பார்க்கும்படி வேண்டினான். கோபால ரத்தினம் சாந்தலட்சுமிக்குப் பிறகு வேறு விவாகம் செய்து கொள்ளவில்லை. பாஸ்கரனிடத்தில் விசேஷ வாத்ஸல்ய முள்ளவனாய் நடந்து கொண்டான். எனவே, பாஸ்கரனின் பிரியத்திற்கு இணங்கி மகாத்மாவின் ஆசிரமத்திற்கு யாவரு மாகப் புறப்பட்டனர். தாமோதர முதலியாரும் கமலமும்கூட இவர்களுடன் பிரயாணமாயினர். சாந்தலட்சுமி மறைந்தபிறகு வஜ்ரவேலரின் துவேஷம மாறிவிட்டது. சிப்பாய் சின்னுவின் வார்த்தையைக் கேட்டு விட்டு லக்ஷ்மியைத் துரத்திவிட்ட கொடுமைக்காகக் காலமுற்றும் தம்மை நொந்து கொள்வதானர்.

ஃ

யாவரும் மகாத்மாவைத் தரிசித்து, அவரது ஆசிரமத்திலிருக்கும் சரஸ்வதியென்னும் சுந்தரியின் வரலாற்றை வினவினர். மகாத்மா வஜ்ரவேலரின் குடும்ப விவரங்களைக் கேட்டு அறிந்துகொண்டு சொல்லுவதாவது. சரஸ்வதி பிறந்து பதின் மூன்று ஆண்டுகளாகின்றன. பூரணமான வித்வத்தன்மையை அவள் பெற்றிருக்கிறாள். அவளது தாய் நூல் நூற்கும் பகுதியில் தலைமைப்பெற்று, தனது புனிதமான ஊழியத்தைச் செய்துகொண்டு, ஞான பக்தி வைராக்கியங்களையே ஸதா கோரி பகவத்பக்தி செய்து காலங்கழிக்கிறாள். அவளை அடுத்த அறையில் போய்ப்பார்க்கலாம் என்றார்.

அந்த சமயம் சரஸ்வதியின் மாதா ஒரு படத்தின் முன்பு அதற்குப் பூஜை செய்தவாறு தன்னை மறந்து நின்றாள். அவளைக் காணச் சென்றவர்களில் கோபாலரத்தினம்

பணக்காரராயுள்ளோர் அனைவருக்கும் ஏழைகளின்பால் அன்பு இருந்திருப்பின் ஏழைகளின் கதி இப்போதைய நிலையிலிராது.

பூஜையில் இருக்கும் படத்தைப் பார்த்துத் திடுக்கிட்டு, ஹா! என்படம் இங்கு எப்படி வந்ததென்று பிரமித்தான். உருவ முற்றும் மாறி சந்நியாசினி போன்றும் விளங்கிய ஸரஸ்வதியின் தாய் உடனே ஹா! என் நாதா! என்று அலறிக் கொண்டு கோபாலரத்தினத்தின் மீது சாய்ந்தாள். ஹா! சாந்த லக்ஷ்மியோவென்று கோபாலரத்தினம் அவளைத் தழுவிக் கொண்டு பிரலாபித்தான். சரஸ்வதி தன் தந்தையையும் மற்றவர்களையும் தெரிந்து கொண்டு இன்புற்றாள். இழந்த கன்றைக் கண்ட பசுவைப்போல் கமலமும் ஆனாள். அப்பொழுது தாமோதர முதலியார் வஜ்ரவேலரைப் பார்த்து, பாஸ்கரன் எனது குமாரனாவான். அந்த விவரம் உங்களுக்குத் தெரிந்தால் அவனை என் பெண்ணைப்போல உதறி விடுவீர்களென்று நினைத்து அவன் பெற்றோர்கள் இரங்கூனில் இருப்பதாக உபாத்தியாயரைச் சொல்லும்படி செய்வித்தோம். அவனும் உங்கள் ஆதரவில் வளர்ந்து உத்தமமான நிலையை யடைந்தான் என்று கூறினார். வஜ்ரவேலர் இதைக் கேட்டு 'அப்படியா' என்று சந்தோஷித்தார். காலத்திற் கேற்றபடி மாறக்கூடியது மனிதர்களுடைய மனோ நிலை. பாஸ்கரன் தன் தம்பியென்று தெரியவும் சாந்தலக்ஷ்மி அவன் கரங்களைப் பற்றிக்கொண்டு கண்ணீர் உதிர்த்தாள். முகமறியா நிலையில் அவனைக்கண்ட போதே தன் உள்ளத்தில் ஒருவகைக் கவர்ச்சி உண்டானதின் பொருளை அப்பொழுதுதான் உணர்ந்தாள். சரஸ்வதி பிறந்த முனிசிபல் ஜனனப் பத்திரிகையைத் தனது மாமனாரின் பாதத்தில் வைத்து வணங்கிக் கதறியழுதாள். வஜ்ரவேலர் தான் செய்த கொடிய திரஸ்காரத்துக்குத் தன்னை மன்னிக்கும்படி வேண்டிக்கொண்டார்.

ஃ

'நன்மையேயாவும் நன்மையாய் முடியின்' என்பதுபோல யாவும் பகவத் ஸங்கல்பத்தினால் நலமாக முடிந்திருப்பதைக் கண்டு மகாத்மா அனைவருக்கும் ஆசி கூறினார். வஜ்ரவேலரைப் பார்த்து, கோட் சொன்ன நீசமான மொழிகளைக் கே

வீட்டுச் சாதம் அடக்குகிற பசியை ஹோட்டலில் எவ்வளவுக்குத் தின்பண்டங்கள் புசித்தாலும் அடக்க முடியாது. மறு நிமிஷமே பசி வந்துவிடும்.

ட்டு உத்தமியும் பதிவிரதா ரத்னமுமான சாந்தலக்ஷ்மியைப் பூர்ணகர்ப்பிணியான நிலையில் வெளியில் துரத்திவிட்டீர்கள், செல்வம் சொல்லுக்கும், தீய செயலுக்கும் அஞ்சாது என்ப தற்கு உதாரணமாயினீர். இக்குற்ற சாந்தலக்ஷ்மி பத்திரிகா ஞானம் விசேஷமாக வாய்ந்தவளானதாலும் என்னிடத்து விசேஷபக்தி வைத்து என்னிடம் வந்து அபயங்கேட்டாள். தன் செய்திகளைச் சொல்லி அழுதாள். தனது கணவனுர் தன்பிரிவால் துன்புற்றாலும், தன் மாமனுரின் மனது சஞ்சல ப்படக் கூடாதென்றும், தன்னொருத்தியால் பிதா புத்திர பிரி வினை நேரக்கூடாதென்றும் தெரிவித்தாள். உத்தமியும் வித் யாவதியுமான அவள் வேண்டுதலை அந்த நிமிஷமே அன் புடன் ஏற்றுக்கொண்டேன். அதன்பின் சரஸ்வதி பிறந்தாள். நீங்கள் அன்று ஆக்ஞையிட்டபடி முனிசிபல் ஜெனனப் பத்தி ரிகையும் வாங்கிவைத்திருக்கிறது. யாவற்றையும் ஒப்புக்கொ ள்ளுங்கள் என்றார். வஜ்ரவேலர் சிரம் சாய்த்து வணங்கி மௌ னமாக நின்றார்.

ஃ

மகாத்மாவினிடம் யாவரும் விடைபெற்றுக் கொண்ட னர். சாந்தலக்ஷ்மி கொண்டுவந்த நூறு ரூபாய் வட்டியும் முதலுமாகப் பாங்கியில் பெருகிக் கொண்டிருந்தது. அதைக் கதர் அபிவிருத்திக்காக உபயோகித்துக் கொள்ளும்படி. சாந்த லக்ஷ்மி மகாத்மாவை வேண்டிக் கொண்டாள். வஜ்ரவேலரும் ஆறுயிரம் ரூபாய் போல் கதர் அபிவிருத்திக்கு உதவினர். சாந்தலக்ஷ்மியும், சரஸ்வதியும் மகாத்மாவினிடம் விடை பெ றுகையில் பிரிவாற்ருது கதறியழுதனர். மகாத்மாவின் கண் களிலும் ஜலம் பெருக, அதை அவர் துடைத்துக் கொண்டு அனைவரையும் ஆசீர்வதித்து ஒவ்வொருவருக்கும் ஒரு ராட்டி னம் பரிசு கொடுத்து அனுப்பினர்.

கும்பகோணத்தில் பாஸ்கரனுக்கும் சரஸ்வதிக்கும் மிக் க வைபவமாக விவாகம் நடந்தேறிற்று. சாந்தலட்சுமி பதி பக்திபராயணியாய் தன்பர்த்தாவுடன் இன்புற்றிருக்கின்ருள். யாவும் அவன் அருள்.

சாந்த லக்ஷ்மி முற்றிற்று.

சாமுவின் சம்பாத்தியம்

மூத்த மனைவிக்குச் செய்த கொடுமையை இளைய மனைவியிடம் அனுபவித்த விநோதம்

மூன் குறிப்பு—இவ்வினிய கதை ஸ்ரீமான் பி. எம். ஆர். அய்யர்வாள் 17—8—1929ல் "சுதேசமித்திர"னுக்கு எழுதியதாகும். அது பாதிக்கதையாகவே இருப்பதாய் எனக்குத் தோன்றியதால், மறு பாதிக்கதையையும் எழுதி முடித்தேன். அது "மித்திரன்" வாரப்பதிப்பில் 28-9-30 லும், 5-10-30 லுமாகப் பிரசுரமாயிற்று. கதையின் முற்பாதியையும் ஒன்றுசேர்த்து வாசிப்பின் மிக்க ருசிக்குமென்பது என் எண்ணம். அவ்விதம் இருபகுதிகளையும் ஒன்று சேர்த்து வெளியிட "சுதேசமித்திரன்" ஆசிரியர், ஸ்ரீமான் ஸி.ஆர். ஸ்ரீநிவாசய்யங்காரவர்கள் எனக்கு மனமுவந்து அனுமதி யளித்திருக்கின்றாராதலின், இக்கதையை இங்கு பதிப்பிக்கின்றேன். இக்கதையுடன் சேர்ந்த நான்கு படங்களையும் எனக்கு அன்புடன் "மித்திரன்" ஆசிரியரவர்கள் உதவினரென்பதையும் நன்றியறிதலுடன் இங்கு குறிப்பிட விரும்புகின்றேன்.

இராமாநுஜன்.

ஒருவன் ஒன்று பேசினால், ஆம், ஆம் என்று அவனுக்குத் தகுந்தபடி தாளம் போட்டுக் கொண்டே சென்றுவிடு, பிறகு அவனும் பேச சாக்கில்லாமல் அடங்கிவிடுவான். அவனை எதிர்த்துச் சொல்வதனால் அதற்கு அவன் பதில் பேச வார்த்தை வளருகின்றது. இதைவிட பொழுதுபோக்கு அவன் போக்கிலேயே அவனை விட்டு வார்த்தைகளை முடித்துவிடு.

வக்கீல்களையும் வைத்தியர்களையும் நம்பாமல் முடிவதில்லை. அவர்களின் மனம் நல்லதாயிருந்தால் நன்மையே. அந்த மனம் மாறினாலோ நமது எக்காலமும் மாறிப்போன மாதிரி தான்.

முற்பகுதிக் கதை

(பி. எம். ஆர். எழுதியது)

முருகன் பட்டிப் பாளையம் ஒரு சிறு கிராமம். ஆறு தெருக்கள் உண்டாயினும் வீடுகள் நாற்பதுக்கு மேலில்லை. இவற்றில் கூடை முறங்கள் முடைந்து விற்றுப்பிழைக்கும் குறவர் வீடுகள் பதின்மூன்றும் ஒருதனித் தெருவு. மற்ற ஐந்து தெருக்களுக்கும், தனித்தனியே பள்ளக்குடியானத் தெரு, மேட்டுத் தெரு, கள்ளர் தெரு, பிள்ளைமார்தெரு, நாய்க்கர் தெரு, என்ற தனித்தனிப் பெயர்கள் உண்டு. சாமு பிள்ளைமார் தெருவில் வசிப்பவன். அவனொருவனில்லாமலிருந்தால், முருகன்பட்டிப்பாளையத்திற்கு தற்போது ஏற்பட்டிருக்கும் அவ்வளவு பிரக்யாதி ஏற்பட்டிராதென்று திட்டமாய்ச் சொல்லலாம்.

ஃ

சாமு ஒரு பணக்காரனுமல்ல, படிப்பாளியுமல்ல, ஒரு பெரிய போக்கிரியுமல்ல, அவன் நடந்து செல்லும்போது அவனது முகம் எப்பொழுதும் நிலத்தை நோக்கினவண்ணமாகவே இருக்கும். யாரையும் ஏறிட்டுப் பாரான். கிராமத்தார் யாரிடமும் அவன் வலியப்பேசுவதுமில்லை. யாரும் அவனிடம் பேச்சுக்கொடுப்பதுமில்லை, அவனைக் கண்டால் முருகன்பட்டி பாளையத்திலுள்ள ஆண்களாகட்டும் பெண்களாகட்டும் சிறுவர்களாகட்டும் பெரியவர்களாகட்டும் கடைக்கண்ணால் பார்த்துவிட்டு முகத்தை வேறு புறமாகத் திருப்பிக் கொண்டு எங்கேயோ பார்ப்பதுபோல் பார்த்துக் கொண்டே போய்விடுவார்கள், இதற்கு ஒரு காரணமுண்டு.

ஃ

எங்கள் தாலூக்காவில் எந்தக் கிராமத்தில் என்ன திருட்டு நடந்தாலும், அத்திருட்டின் சம்பந்தமாய் சாமுவின் வீடு ஸர்க்கிள் இன்ஸ்பெக்டர் கேசவ நாய்க்கரால் சோதனை செய்யப்படுவது பல வருடங்களாக நடந்துவரும் ஒரு வழக்கம். வருஷத்தில் நாலைந்து முறைகளாவது சாமுவின் வீடு போ

மனஸாக்ஷிக்கும் கடவுளுக்கும் பயந்து நடப்பவன் மனிதர்களுக்குப் பயப்படான்' மனிதர்களுக்கு அஞ்சி எதுவும்செய்வோன்

மறுமலர்ச்சி—புதிய தொடர்கதை—நூல்

லீஸ் சோதனைக்குட்படாமலிருந்தது கிடையாது. ஒவ்வொரு சோதனையின்போதும் சம்பிரதாயமான சாட்சிகளைக்கூட வைத்துக் கொள்வதற்காக ஸர்க்கில் இன்ஸ்பெக்டர் கேசவ நாய்க்கர் கிராமத்தில் ஐந்து ஆறு பெயர்களைக்கூட வைத்துக் கொள்வது வழக்கமாகையாலும், சோதனைகள் அடிக்கடி நடைபெறவுண்டாகையாலும் முருகன்பட்டிப்பாளையத்திலுள்ளவர்களில் ஒருவர்கூட பாக்கியில்லாமல் சோதனைச் சாட்சிகளாக இருந்திருக்கின்றனர். சோதனைகளில் சில சமயங்களில், சந்தேகப்பட்ட சாமான்கள் எனக்கூறப்படும் வஸ்துக்கள் கைப்பற்றப்பட்டதுமுண்டு. ஒன்றுமே கைப்பற்றப்படாமல், சோதனை பயனற்றதாய் முடிந்ததுமுண்டு. சோதனையின் பயன் என்னவாயினும், ஸர்க்கிள் இன்ஸ்பெக்டர் கேசவ நாய்க்கர் சாமுவை தம்முடன் கிராமத்திலிருந்து கடத்திக்கொண்டு போகப்பட்ட சாமு இரண்டொரு நாட்களில் திரும்புவதுமுண்டு. இரண்டொரு மாதங்கள் கழித்துத் திரும்பி வந்து சேருவதுமுண்டு. சாமு ஊரிலில்லாத நாட்களில் சிறையிலிருந்து வருவானென்பதும் வேறு எங்கும் சென்றிருக்க மாட்டான் என்பதும் முருகன்பட்டிப் பாளையத்திலுள்ள அனைவருக்கும் நிச்சயமாய்த் தெரியும். என் மனதில் வெகு நாட்களாக அவனைக் கேட்டறிய வேண்டுமென்று உறுத்திக் கொண்டிருந்த விஷயத்தைப்பற்றி வினவலுற்றேன். அதென்னவென்றால், திடசரீரியாயும், இயற்கையின் சாந்தமும், நற்குணங்களும் வாய்க்கப் பெற்றவனாயுங்காணப்படும் அவன், ஏன் அடிக்கடி களவுகளில் சம்பந்தப்பட்டுச் சிறை செல்லத் துணிகின்றனனென்பதுதான். இக்கேள்வியை அவனிடம் கேட்க முதலில் நான் சிறிது சங்கோசப் பட்டேனாயினும், நெடு நாளையப் பழக்கத்தையும் அதனால் ஏற்பட்ட ஒருவகை நட்பையும் பாராட்டி சங்கோசத்தை விலக்கிக் கேள்வி கேட்கத் துணிந்தேன். சாமுவும், சமுசயத்திற்கு இடமின்றி பதில் அளித்தான்.

ஃ

அவனும் நெஞ்சினுள் பகையை மறைத்துக் குலாவ, இவனும் தன் மனத்துள் கொடிய விரோதத்தை வைத்துக்கொண்டு குலாவ அவ்விருவரது ஒற்றுமையும் எவ்வளவு நேரத்திற்கோ தெரியவில்லை.

"அடிக்கடி போலீஸார் வசப்பட்டு சிறைக்குச் செல்வது உனக்குக்கஷ்டமும் துக்கமும் பொருந்திய காரியமாகத் தோன்றவில்லையா? நீ ஒரு ஏர் பயிர்செய்யவோ, அல்லது வேறு வேலையோ செய்துகொண்டு,கல்யாணம் கார்த்தி செய்து கொண்டு, ஸம்ஸாரியாய் வாழவிருப்பப்படவில்லையா?" என்று வினவினேன்.

ஃ

அதற்கு சாமு "சிறைக்குப் போவதே எனக்கு ஒரு பிழைப்பாகிவிட்டது" என்று சொல்லிக்கொண்டே என்னை உற்று நோக்கினான்.

ஃ

உள்ளபடியே எனக்கு ஒன்றும் விளங்கவில்லை.நானும் சாமுவின் முகத்தை உற்று நோக்கினேன். அவன் முகத் தோற்றத்திலிருந்து அவன் உண்மையையே பேசுகின்றானென்று மாத்திரம் நான் நிச்சயமாய் நம்ப முடிந்தது.

ஃ

"ஜெயிலுக்கு வழக்கமாகப் போய்க்கொண்டிருப்பதும் ஒரு பிழைப்பா?"

"வேறு வழியில்லாமையால் பிழைப்புக்கு அது ஒரு வழியாய் விட்டது"

"எப்படி?"

"எனக்கு மாத்திரமல்ல;என்னைச் சிறைக்கனுப்புவதிலிருந்து கேசவனாய்க்கருக்கும் உயர்பதவி சிரமமின்றிக் கிடைக்க வழியுண்டாயிற்றென்று சொன்னால் அது தவறாகாது" என்று அழுத்தமாய்க் கூறினான் சாமு.

"அடிக்கடி சிறைக்குச் சென்று, 'கேடி' என்ற பெயர் பெற்று,ஊராரால் புறக்கணிக்கப்பட்டு தலை குனிந்து நடக்கும்படி ஒருவன் தன்னை வைத்துக் கொள்வது வெட்கத்திற்கிடமான காரியமல்லவா? கேசவனு நாய்க்கருக்கு உயர்பதவி கிடைப்பதற்காக நீ சிறைக்குச் செல்லவாவது? நீ சொல்வது விந்தையாக இருக்கின்றதே!" என்றேன் நான்.

ஃ

அவன் இல்லாமலே தன் சங்கதிகளை முடித்துக் கொண்டு போகலாமெனத் தெரிந்து துணிந்துவிட்டவனிடம், அவன் தன்னுடைய கிராக்கித்தனத்தைக் காண்பித்துக் கொள்ள முடியாது.

சாமு பேசும்போது அவன் முகத்தில் விசனக்குறிகள் காணப்பட்டன. அவன் சிறைக்கு முதல் முதலாகச் சென்ற விருத்தாந்தத்தைக் குறித்துப் பின்வருமாறு கூறலுற்றான்.

ஃ

"திருநாவுக்கரசு பாளையம் பெரியபண்ணை ஸ்ரீநிவாச பிள்ளையை உங்களுக்குத் தெரிந்திருக்கலாம். அந்தப் புண்ணியவான் தான் முதன் முதல் என்னைச் சிறைக்கு அனுப்பி சிறைப் பயத்தைப் போக்கடித்தவர். பதின்மூன்று வருஷங்களுக்குமுன் அவருடைய வாலிப மனைவி ஜானகியம்மாள் திடீரென்று இறந்ததையும், அப்பெண்மணியின் மரணத்தைக் குறித்து அப்பொழுதும் இப்பொழுதும் உலாவிவரும் வதந்திகளையும் நீங்கள் கேட்டிருக்கலாம். அக்கன்னிகை தனது கணவனால் கொடுவதை செய்யப்பட்டுயிர் துறந்தாளென்று உலவும் வதந்தி உண்மையானதென நான் கூறக்கூடும். ஏனென்றால், ஸ்ரீநிவாஸப் பிள்ளையின் குரோதத்திற்கு ஆளாகி அநியாயக் கொடுமைகளுக்குட்படுத்தப் பட்டவள் அப்பெண்மணி மாத்திரமல்ல, நானும் ஒருவன். அவர் தமது அழகிய வாலிப மனைவிமீது அளவற்ற சந்தேகங்கொண்டு அச்சந்தேகம் காரணமாக அம்மாதை அவர் சகிக்கொணாத துன்பங்கள் செய்து வந்தாரென்பதும் அதற்கு அவருடைய சகோதரியும் தாயும் அவருக்கு உதவியாயிருந்தார்களென்பதும் யாவரும் அறிந்தவிஷயம். தினந்தோறும் புதுப்புதுத் துன்பங்களுக்கும் உட்படுத்தப்பட்டு வந்த அக்கன்னிகையை அவளது சிறு பிராயமுதற்கொண்டே எனக்குத் தெரியும். அப்பெண்மணி பிறந்த ஊரான பேரூர்தான் எனது மாமன்வீடு. நான் அடிக்கடி எனது மாமன் வீட்டுக்குப் போவதுண்டாகையால் பேரூரில் பெரிய மிராசுதாரரின் புதல்வியான அப்பெண்மணியை சிறு பிராயத்திலேயே பார்த்திருக்கின்றேன். ஸ்ரீநிவாசப் பிள்ளைக்கு இப்பெண்மணி விவாகஞ்செய்து கொடுக்கப்பட்டதற்குப் பிறகும், நான் பேரூருக்குச் சென்று திரும்பும் போதெல்லாம், பிறந்தகத்து க்ஷேம சமாசாரங்களைச்சொல்ல ஸ்ரீநிவாசப்பிள்ளையின் வீட்டுக்குச்சென்று அப்பெண்மணி

ஒருவன் உத்ஸாகம் குன்றி மனம் ஏங்கியிருக்கையில் அவனுக்குப் புதிய உற்சாகத்தைப் புகட்டுவோர் ஸமய சஞ்சீவிகளாவர்.

யைக்கண்டு சேதி சொல்லிவிட்டு வருவதுண்டு. சந்தேகங்கொண்ட சீநிவாசப்பிள்ளை அவர் மனைவியிடம் அவளது பிறந்தகத்துச் சேதி சொல்வதற்காக நான் செல்வதையும் வெறுத்தமையால் நான் அவர் வீடு செல்வதையும் நிறுத்திவிட்டேன்.

ஃ

புருஷனின் கொடுந்தன்பங்களுக்கும் நாத்தி மாமிகளின் கொடுமைகளுக்கும் ஆளான துர்ப்பாக்கியவதி ஜானகி ஒரு நாள் தண்ணீரெடுக்கக் குளக்கரைக்குச் சென்று கொண்டிருக்கையில் என்னைச் சந்தித்து, மடியிலிருந்து ஒரு கடிதத்தை எடுத்து "தபால் மூலமாய் அனுப்பவும் எனக்கு வசதியில்லை; வேறு எவரிடமும் கொடுத்தனுப்புவதற்கும் பயமாயிருக்கின்றது; எப்படியாவது இக்கடிதத்தை பேரூரிலுள்ள எனது தந்தையிடத்திலோ, அல்லது தாயிடத்திலோ சேர்பித்து விட வேண்டும்" என்று கூறி என்கையில் கொடுத்த நான் அப்படியே செய்வதாக அக்கன்னிகையிடம் வாக்களித்து அக்கடிதத்தைப் பெற்றுக்கொண்டு, நான்கு அடி முன்னேறுவதற்குள்ளாக நூறு கஜ தூரத்திற்கப்பால் சீநிவாசப்பிள்ளை தமது மனைவியைப் பின்தொடர்ந்து கொண்டு வருவதைப் பார்த்தேன். கண்கள் சிவக்க அவர்கள் கடுமையாக என்னை நோக்கி நடந்து வருவதைப் பார்த்ததும் ஜானகியம்மாள் என்வசம் கடிதம் கொடுத்ததை அவர் பார்த்திருப்பாரென்று ஊகித்துக்கொண்டேன். உடனே கையிலிருந்த கடிதத்தை கசக்கி புகையிலை அடக்குவதுபோல் வாயிலிருந்த வெற்றிலையுடன் சேர்த்து அடக்கி மென்று விழுங்கிவிட்டேன். நான் எதிர்பார்த்தவண்ணமே சீநிவாசப்பிள்ளை என்னிடம் வந்து எனது கன்னத்தில்திடீரென்று இரண்டு அறைகள் அறைந்து கடிதத்தைக் கொடுக்கும்படி கேட்டார். ஜானகியம்மாள் என்னிடம் ஒன்றுமே கொடுக்கவேயில்லையென்று சாதித்தேன். "அந்த விபசாரியைக் கொளுத்திவிட்டு உன்னையும் அழிக்காவிட்டால் என்பெயர் சீநிவாசப்பிள்ளையல்ல" என்று சபதம்கூறிவிட்டு அதிவேகமாய் வீடு நோக்கி நடந்தார். நானும் ஜானகியம்மாளுக்கு என்ன நேரிடுமோவென்ற அடங்காக் கிலேசத்துடன் வீடு நோக்கிவந்தேன்.

ஒருவருக்கொருவர் விட்டுக் கொடாமற்போனால் சமாதானம் கெட்டு சச்சரவில் முடியும்.

"இச்சம்பவம் நடந்த தினத்தன்று இரவுதான் ஜானகி அம்மாள் திடீரென்று மரணமடைந்தது. நான் அன்று இரவே அதிவேகமாய் பேரூருக்குச் சென்று, ஜானகி அம்மாளின் பெற்றோர்களிடம் நடந்த விருத்தாந்தங்களைக் கூறி அவர்களுடைய புதல்வியின் உயிருக்கு ஆபத்து நேரிடக்கூடுமென்பதையும், ஆகையால் உடனே திருநாவுக்கரசு பாளையத்திற்குச் செல்லும்படிக்கும் சொல்லிவிட்டு வந்தேன். அவர்கள் புறப்பட்டு வந்து சேருவதற்கு முன்னதாக சீனிவாசப்பிள்ளை, ஜானகி அம்மாளின் சரீரத்தைத் தகனஞ்செய்து சாம்பலாக்கிவிட்டு காலராவில் இறந்து விட்டதாக எவருக்கும் சமாதானம் சொல்லி ஜானகி தந்தையின் முறைப் பாட்டின் மீது விசாரணையை நடத்தவந்த போலீஸ் அதிகாரிகளுக்கும் திருப்திகரமான ஜவாபு சொல்லி விட்டமையால், ஜானகியம்மாளின் மரணத்தைப்பற்றிய உண்மை வெளிப்படுத்தப்படாமலேயே போயிற்று. சீனிவாசப்பிள்ளை தமது சபதத்தில் முதற்பாகத்தை நிறைவேற்றிவிட்டார்.

ஃ

"இச்சம்பவம் நடந்த மூன்றும்நாள் அமாவாசை. எனது வீட்டில் சில விருந்தாளிகள் வந்திருந்தார்கள், அமவாசை புண்யதினமாகையாலும், விருந்தாளிகள் வந்திருந்தமையாலும் வாழையிலைகளிரண்டு வாங்கிக்கொண்டு வரலாமென்று திருநாவுக்கரசுப் பாளையத்திலுள்ள, மார்க்கபடையாட்சியின் தோட்டத்திற்குச் சென்று அரையணாவுக்கு இரண்டு இலைகள் வாங்கிக்கொண்டு திரும்புகையில், வழியில் சீனிவாசப்பிள்ளை என்னை இரண்டு ஆட்களுடன் வழிமறித்து பின்கட்டு முறையாக என்னைக்கட்டி ஒரு கட்டு இலையையும் இரண்டு வாழைக் குலைகளையும் என் தலைமீது ஏற்றிவைத்து கிராமச்சாவடியில் கொண்டுபோய் நிறுத்தி, போலீசுக்கு ஆள் அனுப்பி அவர்கள் வந்ததும் கிராம மணியக்காரர், தலையாரி, வெட்டி முதலியவர்கள் முன்னிலையில் நான் அவருடைய வாழைத் தோட்டத்தில் புகுந்து கொள்ளையிட்டதாகவும் அவர் கையும் களவுமாய் சாட்சிகளுடன் என்னைப் பிடித்ததாகவும் பிரியாதுகொடுத்தார். இப்பொழுது ஸர்க்கிள் இன்ஸ்பெக்டராக இருக்கும் கேசவ

அவரவரின் கொள்கையை அவரவர்கள் ஸ்தாபிப்பதற்காக அதிக் கஷ்டங்களை அனுபவிக்கும்படி நேரிட்டிருக்கிறது நேரிடுகிறது.

நாய்க்கர் அப்பொழுது 'ஹெட்கான்ஸ்டேபிளாக இருந்தார். அவர்தான் இந்தத் 'திருட்டு' கேஸை செய்ய வந்தவர். ஸ்ரீநிவாசப்பிள்ளையின் வாக்குமூலத்தை வாங்கிக்கொண்டு என் கைகளில் விலங்குகளைப்பூட்டி, வாழைக்குலைகளுடன் என்னை ஸ்டேஷனுக்குக் கொண்டுபோனார். வழி நெடுக, எனது தாய் எங்களைப் பின் தொடர்ந்து தலைவிரிகோலமாய் அழுது அலறிக்கொண்டே வந்தாள். அவள் பட்ட துயரம் என் இருதயத்தைப் பிளந்தது. 6,7,நாள் ரிமாண்டிலேயே இருந்தேன். அச்சமயத்தில் கேசவநாய்க்கர் என்னிடம் வந்து எதிர் வழக்காடுவதில் பிரயோஜனமில்லை யென்றும், அப்படிச்செய்தால் மாஜிஸ்டிரேட் கோபமடைந்து நீண்டகால தண்டனை விதித்து விடுவாரென்றும்,ஸ்ரீனிவாசப்பிள்ளை அநேக சாட்சிகளைத் தயாரித்து வைத்திருப்பதால் எதிர் வழக்காடிப் பயன்பெற முடியாதென்றும் குற்றத்தைச் செய்ததாக ஒப்புக்கொண்டால் மாஜிஸ்டிரேட் கருணைபாராட்டி, சொற்ப தண்டனையுடன் விட்டு விடக்கூடுமென்றும் எனக்கு ஆலோசனை கூறிக்கொண்டு வந்தார். எதிர்வழக்காட என் கையில் பணமில்லாமையாலும், கேவநாய்க்கரின் யோசனைகள் எனக்குஇங்கிதமாய்த் தோன்றியமையாலும், எதிர்வழக்காடாம லிருந்து விட்டேன். விசாரணை சிலமணி நேரம் நடந்தது. சாட்சிமேல் சாட்சியாக ஸ்ரீனிவாசப்பிள்ளை தரப்பில் வந்தார்கள். கேசவ நாய்க்கரின் யோசனையின்படி நான் குற்றத்தை ஒப்புக்கொண்டேன். மாஜிஸ்டிரேட் மூன்றுமாதக்கடினகாவல் தண்டனை விதித்தார். விசாரணையின்போது, கண்ணீரும் கோலமுமாய் நின்று கவனித்துக் கொண்டிருந்த தாய், எனக்கு மூன்று மாதக் கடின தண்டனை விதிக்கப்பட்டதைக் கேட்டதும், ஹோவென்றலறிக்கொண்டு தரையில் விழுந்தாள். அவளுக்கு ஆதரவுகூறி தேற்றியனுப்பவும் என்னைச் சூழ்ந்திருந்த போலீஸ் சேவகர்கள் அனுமதிக்காமையால், எல்லாம் வல்ல இறைவனே, அவளைக் காப்பாற்றட்டுமென்று பிரார்த்தித்துக்கொண்டு சிறையை நோக்கிச் சென்றேன்.

ஃ

ஒவ்வொருவரிடமும் ஒவ்வொரு உயர்வான குணம் காணலாமானதால், எவரையும் வெறுத்து ஒதுக்குதல் கூடாது.

"நான் எனது சிறைவாசத்தை அனுபவித்துவிட்டு, ஊருக்குத் திரும்பி வந்ததும், வீடு பாழடைந்து கிடக்கக் கண்டேன். எனது தாய் நான் சிறைக்குச் சென்ற மூன்றும்நாள் உயிர் துறந்துவிட்டாளென்ற சமாசாரம் எனக்குச் சொல்வார்கூட யாருமில்லை. அயல் வீட்டு சிறுவன் ஒருவன் என்னை அணுகிப்பேசவும் பயப்பட்டவனாய், தூரத்தில் நின்று கொண்டு என் தாயின் மரணத்தைக் குறித்துத் தெரிவித்திராவிடில் அவ்விஷயமும் எனக்குத் தெரிந்திராது" என்று சாமு சொல்லிக்கொண்டு வரும்போது அவனது கண்களிலிருந்து தாரை தாரையாக நீர்த்துளிகள் தரையிலிருந்த கருங்கல்மீது விழுந்தன.

ஃ

"எனது அருமைத் தாய்க்கு உத்தரகிரியையோ கருமாதியோ திதிகளோ நான் செய்யக்கூடவில்லை. அவளுடைய ஞாபகார்த்தமாக ஏதேனும் கிரியைகள் செய்யலாமென்று நினைத்தாலும் உற்றார் உறவுமுறையார் யாரும் அழைத்தாலும் வரமாட்டார்களென்பதைத்தெரிந்துகொண்டேன். இப்பொழுது நான் வடிக்கும் கண்ணீர், பரலோகத்திலுள்ள என் தாயின் ஆத்மாவுக்கு திலதர்ப்பணமாகட்டும்" என்று கூறி சாமு தனது கண்களைத் துடைத்துக்கொண்டு, மேலும் தனது கதையைச் சொல்லத் தொடங்கினன் —

ஃ

வீட்டில் இரண்டு சட்டிகளும் ஒரு பானை நிறைய அரிசியும் ஒரு சிறு குடுக்கையில் சிறிது மசாலைச் சரக்குகளும் இருந்தன. அவற்றை வைத்துக்கொண்டு, தினம் ஒருவேளை சமைத்துக் சாப்பிடுவதும், ஒழிந்த நேரங்களில் ஒருவர் கண்ணிலும் படாமல் சிறிது ஏகாந்தமாய் சுற்றித் திரிவதுமாக் காலங்கழித்து வந்தேன். எனது தாயின் மரணத்தைக் குறித்து முதல் முதலாக என்னிடம் துக்கம் விசாரிக்க வந்தவர் கேசவ நாய்க்கர் தான். அவர் துக்கம் விசாரிப்பதற்காக வரவில்லை. நான் கேடியாகி விட்டமையால் பீட்டின் போது என்னைப் பார்த்துவிட்டுப்போகவே வந்தாராயினும், போகிற போக்கில் கிழவி காலயாய் விட்டாற்போலிருக்குது, பாவம்

தாங்களாக எந்த வேலையும் செய்யாமற்போயினும் மற்றவர்கள் செய்த வேலைகளில் குற்றங்கண்டுபிடிப்பது சிலரது வழக்கம்.

என்ன செய்கிறா. என்று கூறி விசாரித்து விட்டு நான் என்ன வேலைசெய்து ஜீவனம் செய்யப் போகிறேனென்பதை விசாரிக்கத் தொடங்கினர்.

ஃ

காரணமின்றி தண்டிக்கப்பட்டு அந்தக்காரணத்தால் ஊ ராரால் புறக்கணிக்கப்பட்டு ஏகாந்த வாசஞ் செய்ய நேரிட்ட மையால் வெறுப்புற்ற நான் 'ஜெயில் ஜீவனமே நல்ல ஜீவன மென்று தோற்றுகிறது' என்ற பதிலுரைத்தேன்; கேசவ நா ய்க்கர் புன்சிரிப்புடன் பேசாது போய்விட்டார்.

ஃ

அன்று சாயங்கிரம் தேரிழந்தூர் கோவிலில் தேர் திரு விழா நடந்தது. திருவிழாவையாவது பார்த்து வாலாமென்று நானும் சென்றேன். தாசில்தார் முகாம் செய்திருந்தார். அ வருடைய மனைவி கமலாம்பாள் அம்மாளின் கழுத்திலிருந்த தாலிச்சரடும், சங்கிலியும் தேர்வீதியிலே கூட்டத்தில் களவு போய்விட்டன. கோபுர வாசலில் நின்றுகொண்டிருந்த என்னை கேசவநு நாய்க்கர் கைதுசெய்து லாக்கப்பில் அடை த்தார். மறுநாள் என் வீடு சோதனை நடந்ததாம்: அங்கிருந்து கமலாம்பாள் அம்மாளின் கோஹர்ஜான் சங்கிலியில் ஒருபகு தி அகப்பட்டதாம். தாலிஅறுபட்டுப்போனதில் கமலாம்பாள் அம்மாளுக்கு வருத்தமில்லையாம். தட்டான்மாதிரிக்குக் கா ண்பிக்க சங்கிலியில் ஒருபகுதி கிடைத்துவிட்டதும், திருடன் பிடிபட்டதும் அந்த அம்மாளுக்கும் அவள் மூலமாய் தாசில் தாருக்கும் மிகுந்த திருப்தி ஏற்பட்டதாம்.

ஃ

என்மீது வழக்கு நடந்தது. வழக்கம்போல் எதிர் வழக்காடாமலும் போலிஸ் சாட்சிகளில் யாரையும் கிராஸ் கேட்காமலும் இருந்தேன். மீண்டும் ஆறு மாதம் கிடைத்தது.

ஃ

இந்த இரண்டாம்முறை நான் சிறையினின்று வெளி வரும்போது கேசவ நாய்க்கர் இன்ஸ்பெக்டர் உடையுடன் ஸ்டேஷன் வாயிலில் நின்றுகொண்டிருக்கக் கண்டேன். என் னை க்ஷேமம் விசாரிப்பதுபோல் விசாரித்து என்னிடம் பல

தங்கள் குற்றங்களை மறைப்பதற்காக மற்றவர்கள் மீது குற்ற ங்களைச் சுமத்துவோருமுண்டு.

வகையில் அனுதாபம் காட்டினர். கமலாம்பாள் அம்மாளின் புருஷனுடைய சிபாரிசின் மேல் கேசவ நாயக்கருக்கு இன்ஸ்பெக்டர் பதவி நான் சிறைக்குச் சென்ற மூன்றும் தினமே கிடைத்து விட்டதாகத் தெரிந்துகொண்டேன்.

ஃ

"அதமுதல் இந்தப்பிர்க்காவில் எங்குகளவு போனாலும், அதன் சம்மந்தமாய் என் வீட்டில் ஒரு சோதனை நடக்கும். களவுபோன சாமான்களில் ஏதேனும் ஒன்று என் வீட்டிலிருந்து போலிசாருக்குக் கிடைக்கும். எனக்கு நாலைந்து மாதங்கள் கிடைக்கும். சாப்பாட்டிற்கு கவலையில்லை. நான் எவ்விதத்திலும் கவலையற்றவனும் விட்டேன். கர்ப்பத்திலுள்ள ஒரு சிசுவைவிட ஒருவன் நிரபராதியாக இருக்கலாம். அவன் பெருங்கள்ளனென்று தீர்மானிக்கப்படலாம். பரம அயோக்கியனுகவும், கொள்ளைக்காரனுகவும் இருக்கலாம். அவன் பரம சாதுவாகப் பாவிக்கப்படலாம். இவையனைத்தும் ஒருவனுக்கு இருக்கும் நல்ல பெயரையும், கெட்ட பெயரையும் பொருத்தது, இந்த நற்பெயரும் கெட்டபெயரும் அவனுடைய காலவசத்தினுலும், கர்மானுசாரத்தினுலும் ஏற்படுகின்றதென்பதே எனது துணிவு. களவுபோன சாமான்களுக்குச் சில சமயங்களில் கால் முளைத்துவிடும். கெட்ட பெயரெடுத்தவன், அல்லது கெட்டபெயர் அளிக்கப்பெற்றவன் வீட்டிற்குள் தானுகவே வந்து உட்கார்ந்துகொள்ளும். எல்லாம் அவரவருடைய தலைவிதி. அவ்வளவுதான் நான சொல்ல முடியும்" என்று சாமு ஒரு ஞானிபோல் சொல்லிப் போய்விட்டான்.

ஃ

சாமுவுக்கு இனிமேல் சிறைவாசம் ஏற்படாமல் எவ்விதம் தடுப்பது? ஊரார் அவனிடம் ஆதரவும் அன்பும் பாராட்டுமாறு எப்படி செய்விப்பது, என்பதைப்பற்றி நான் இன்னும் யோசனை செய்து கொண்டிருக்கின்றேன்.

தன்னை மகா ஞாபகசாலியென்று நினைத்துக்கொண்டு தன் மடியில் ஒன்றைப்பத்திரமாய் வைத்துச் சொருகுகின்றான். பிறகோ பல நினைவில் அதை அவன் மறந்துபோய்விட, அது மடியினின்றும் நழுவிக் கீழேவிழாமல் இருப்பது அவனுடைய நல்ல அதிர்ஷ்டமென்றேதான் சொல்லவேண்டும்.

பிற்பகுதிக் கதை

சாமு ஒவ்வொரு தடவையும் சிறைச்சாலையிலிருந்து வந்ததும் கேசவ நாய்க்கரால் திருட்டுக் குற்றம் சாட்டப் பெற்றுத் தண்டனையடைவான், இவ்விதம் சாமு ஒவ்வொரு தடவையும் தண்டனை பெறும்போது கேசவநாய்க்கரின் பதவியும் உயர்ந்து கொண்டுபோய் இப்பொழுது அவர் போலீஸ் ஸர்க்கிள் இன்ஸ்பெக்டர் பதவிவரை ஏறிவிட்டார். இப்போது தான் சாமு தனது சமீப தண்டனையின் சிறைவாசத்தை முடித்துக்கொண்டு வெளியில் வந்திருக்கிறான்.

***

சாமு சிறைவாசத்தை விட்டுத் தான் ஊரில் வந்து வசித்து மூன்று மாதங்களாய் விட்டன. அநேகமாய் இதுவரை நடந்துள்ள கணக்குகளின்படி பார்த்தால் அவன் சிறைவாசம் தீர்ந்து நான்காவது மாதத்தில் மறுபடியும் கைதி செய்யப்படுவது வழக்கமாய் இருந்து வந்திருப்பதை அறியலாம். நான்காவது மாதம் பிறந்த இரண்டாவது வாரத்திலோ மூன்றாவது வாரத்திலோ அவனைக் கைது செய்வதற்குப் பரமகாருணீகரான கேசவ நாய்க்கர் வந்து விடுவதும், களவுபோன சொத்துக்களில் சில அவன் வீட்டிலிருந்து அகப்படுவதும் வழக்கம். நான்காம் மாதத்தின் முதல் தினத்தை மிக்க விசாரத்துடன் சாமு அநுபவித்துக் கொண்டிருக்கையில், அன்று மாலையில் ஆற்றங்கரைக்குச் செல்லும்பொழுது செல்லமுத்து அவனுக்கு எதிர்ப்பட்டான்.

***

செல்லமுத்து பயங்கரமான ஒரு கொள்ளைக்காரன். இரண்டு தடவை சிறைக்குச் சென்று திரும்பியிருக்கிறான். அது நடந்தது பத்து வருஷங்களுக்கு முன்னே. இதனிடையில் இத்தனை வருடங்களாக அவன் பல களவுகளில் சம்பந்தப்பட்டிருந்தாலும் குரு கடாட்சத்தால் அகப்படவேயில்லை. அவன் கொள்ளையிட்டு வருவதில் குருவுக்கும் பங்குண்டு. இப்பொழுது குருவுக்கும் அவனுக்கும் மனத்தாங்கல் ஏற்பட்டுவிட, அதனால் குரு அவனைக் காட்டிக் கொடுத்து விட்டார். கேசவ நாய்க்கருக்குப் பெரிய திருவேட்டை கிடைத்துவிட்டது.

ஜீவ காருண்யமற்றுப் பிறரை ஹிம்ஸிக்கிறவன் பின்னால் தானும் அந்த ஹிம்ஸைக்குள் எவ்விதமோ சிக்கிக்கொள்கிறான்.

அதற்கான சமயத்தை எதிர்நோக்கிக் கொண்டிருந்தார். இது செல்லமுத்துவுக்குத் தெரிந்ததும் சேசவரசய்யரின் வீட்டி லேயே கொள்ளையிடுவதாய்த் தீர்மானித்துவிட்டான், அத்



சாமுவை ஆற்றங்கரையில் செல்லமுத்துச்சந்தித்தான்.

பெண்களுக்குப் பெண்கள் உதவிச் செய்வதுபோல் ஆண்க ளுக்கு ஆண்கள் உதவுவதில்லை

தீர்மானத்துடன் அவனுக்கு ஒரு குறையும் பிறந்தது. தான் நடத்தும் கொள்ளையில் தன்னை எவரும் பிடித்துக்கொள்ள முடியாது. தான் செய்ததாகவே வெளிக்கு வாராது. ஆயினும், அந்தக் கொள்ளையில் சாமுவை எவ்விதமும் சேர்த்துவிடக்கூடும். பாவம்! மறுபடியும் அவன் சிறை செல்லநேரும். அவன் ஆறு முறைக்கொண்டு நிரபராதியென்றும், எந்தத் தீயவர் கூட்டத்திலும் கலவாத உத்தமனென்பதும் ஊரார் அறியாவிடினும் கள்வர் கூட்டத்தாரும் சிறைசென்றோரும் அறிந்து வைத்துள்ள உண்மை. ஆதலின், அவனை எவ்விதமாவது தப்பித்துக் கொள்ளும்படி நேரிலேயே தெரிவித்துவிட வேண்டுமென்றுதான் செல்லமுத்து புறப்பட்டு வந்துகொண்டிருக்கையில் சாமுவை சந்தித்தான்.

ஃ

செல்லமுத்து தான் இனி செய்ய இருக்கும் காரியங்களைத் தெரிவித்து, சாமுவை எவ்விடத்திற்காவது கண் காணாதபடி ஓடிவிடும்படித் தூண்டினான். சாமுவும் இனி தனக்குச் சிறை தப்பாது என்று தீர்மானித்துக் கொண்டு செல்லமுத்துக்கு வந்தனம் கூறியனுப்பிவிட்டான். நல்லகாலமாய் இவ்விருவரும் சந்தித்ததை எவரும் பார்க்கவில்லை. அன்றைக்கு மறு தினத்திலிருந்து சாமுவை முருகன் பட்டிப்பாளையத்தில் எவரும் காணவில்லை. எங்காவது போய்விட்டானோ அல்லது பழயபடி சிறைக்குத்தான் சென்றானோவென அவ்வூரார் கருதலாயினர். ஒரு வாரத்திற்குப் பிறகு சாமுவின் சொந்த வீட்டை ஒருவர் வந்து இடித்துத்தள்ளிவிட்டு அதிகமான ஆட்களைக்கொண்டு இரண்டு வாரத்திற்குள் சுவர்கள் எழுப்பி ஒரு அழகிய ஓட்டு வீடாகச்செய்து அதைப் பொது வாசகசாலையாக ஆக்கிவிட்டார். இரும்புக் கேட்டுகளும் போடப்பட்டுப் புஷ்பச்செடிகளுடன் ரமணியமான கட்டிடமாகிவிட்டது. வெளியில் "சாமுவின் தர்ம வாசகசாலை" என்று ஒரு பெரிய பலகையில் தீட்டப்பெற்றிருந்தது. அந்த வாசகசாலைக்கு ஒரு வேலைக்காரனும் அமர்த்தப்பட்டான். அவ்

அவரவர்கள் செய்யும் காரியங்களாலும் குணத்தாலும் உயர்வு தாழ்வு உண்டேயன்றி பணத்தால்மட்டும் உயர்வு தாழ்வு கண்டுபிடிக்க முடியாது.

ஊரார் அவ்வாசகசாலையில் சாமுவின் பெயரைச் சொல்லிக்கொண்டு பத்திரிகைகளையும் புஸ்தகங்களையும் உற்சாகமாய் வாசித்துக்கொண்டு ஆனந்தமாயினர்.

செல்வமுத்து தான் தீர்மானித்தபடி நடத்திவிட்டான். கேசவநாய்க்கரின் வீடு அநியாயமாய்க் கொள்ளையிடப்பட்டுப் போயிற்று. களவுநடந்தது வீட்டிலிருந்த ஒருவருக்கும் தெரியாது; யாவும் வைத்தது வைத்தபடியே இருந்தன. கேசவநாய்க்கர் ஏராளமான திரவியத்தைச் சம்பாதித்திருந்தார்: ஒரு சர்க்கார் உத்தியோகஸ்தருக்கு அவ்வளவு திரவியம் எவ்விதம் கிடைத்ததென்று கேள்விபிறக்குமானால் அதற்குத்தப்புவிக்க வேண்டுமென்று ஆயிரக்கணக்கான நோட்டுகளாக மாற்றிப் பெட்டிக்குள் பத்திரப்படுத்தி யிருந்தார்: வயிர நகைகளாகவும் வாங்கி வைத்திருந்தார். குறைந்தது ஐம்பதினாயிரம் ரூபாய்க்கு மதிப்பிடலாம். அந்த முக்கியமான பெட்டியை மட்டும் செல்லமுத்து அபகரித்துக்கொண்டு சென்று விட்டான். மற்ற செங்கல்லால் கட்டிய வீடு, மரப்பலகைகளால் செய்த சாமான்கள், வெகு சொற்பத்தில் வாங்கிவிடக்கூடிய பித்தளை பாத்திர வகைகள், பாக்கியிலும் அடகுக்கு ஒப்புக்கொள்ளப் படாத வெள்ளிப்பாத்திரங்கள் தட்டுகள் முதலிய யாவற்றையும் கேசவ நாயக்கர் பரம்பரை பாத்தியதையுடன் சர்வ சுதந்திரமாய் அனுபவித்துக் கொள்ளும்படி விட்டுவிட்டான்.

கேசவநாய்க்கருக்கு அப்பொழுது மனம் எப்படியிருக்கும்? களவு நடந்த மறுநாட் காலையில் புதிதாக ஒரு நிலம் கிரயக்கிக்கு வந்து, அதற்காக விக்கிரயப் பத்திரமும் எழுதித் தீர்த்து ரிஜிஸ்தர் ஆபீஸில் தொகையைக்கட்டுவதற்காகச் சென்றார். நிலத்தின் கிரயம் அதிகமில்லை, 7500—ரூபாய்தான் பெட்டியைத் திறந்ததும் அதற்குள் வைத்திருந்த பெட்டியைத் தேடினார். அதைக் காணவில்லை! நடுங்கிட்டார். தமது கண்களை நன்றாய்த் துடைத்துக்கொண்டு மறுபடியும் பார்த்தார். இருந்தால்தானே கண்ணுக்குத் தென்படும்? பெட்டி

பணக்கார வீட்டுப்பெண் ஏழையான மாமன் மாமியை மதிப்பது அபூர்வம்.

பை வேறு எந்த விடத்திலாவது மாற்றிவைத்தோமாவென்று யோசித்தார். சென்ற எட்டு வருஷங்களாக அந்தக் கைப்பெட்டி அந்தப் பெரிய பெட்டிக்குள்ளேயே எழுந்தருளியிருந்த சேவை சாதித்து வந்ததாகக் கேசவ நாயக்கருக்கு அவருடைய நெஞ்சு சொல்லிற்று. எவர் எடுத்திருப்பார்? எப்படிப் போயிற்று? என்று நெடுக யோசித்தார். கண்ணீர் விட்டுத் தேம்பியும் அழுதுவிட்டார். பிறகு அழுவது கேவலம் என்று சமாளித்துக்கொண்டு தத்தளித்தபடியிருக்க, அதற்குள் அந்த விஷயம் வீட்டிலிருப்பவருக்குத் தெரிந்து அலங்கோலமாக வெளியிலும் பரவிவிட்டது. போலீஸாரும் வந்து சூழ்ந்து வீடுமுற்றும் ஆராய்ந்தனர், போன சொத்து பெரிய சொத்து.


ஃ

ஏதோ ஒரு வழியில் முயன்றால் இன்னொரு வழியில் துப்புத் துலங்கலாமென்று கேசவநாயக்கர் தீர்மானித்துக் கொண்டு சாமுவின் மீது கிருபா நோக்கமுள்ளவரானார். அவனும் சிறைவிட்டு வந்து நான்காவது மாதம் தொடங்கி மூன்று வாரம் ஆகிவிட்டதல்லவா? இனிமேலும் அவனை ஊரில் வைப்பது கூடாதென்று முருகன் பட்டிப் பாளையத்திற்குப் புறப்பட்டு வந்தார் சாமுவை அங்கு காணவில்லை. அவன் பெயரால் கட்டப்பட்டிருந்த வாசகசாலையைப் பார்த்தார். இவனுக்கும் இவ்வளவு பதவியாவென்று ஆத்திரங்கொண்டார். ஒரு சமயம் சாமுவே தமது பணப்பெட்டியை அபகரித்துப் பழிக்குப்பழி தீர்த்துக்கொண்டு அந்த மமதையில் தன் ஊரில் ஒரு தர்ம வாசக சாலையையும் ஏற்படுத்திவிட்டு வேறிடத்திற்குச் சென்றிருக்கலாமென்று அவருள்ளத்தில் திடீரென்று தோன்றிற்று, விஷயம் அப்படித்தானிருக்க வேண்டுமென்று தீர்மானித்தார். அவ்விதமில்லாவிடில் சமீபத்தில் எந்தப் பெரிய களவும் நடக்கவில்லை. பறிகொடுத்த பாக்யவான் தான் ஒருவனேதான். ஆகவே சாமுவே பழிக்குப் பழியாக அந்த வேலையைச் செய்திருக்க வேண்டுமெ

கொண்ட கணவன் எவ்வளவு பிரபலஸ்தனாயினும், அவன் மனைவி கற்குலாங்கனையாயில்லாவிடில் அவனது நற்பெயருக்கு ஹானி விளைத்துவிடுகிறாள். தன்னை அவன் கொன்று விட்டுத் தூக்குமரத்தில் ஏறவும் செய்துவிடுகிறாள்.

ன்று விக்ரயித்து இதோ ஒரு நிமிஷத்தில் ஜமா செய்கிறே னென்று மீசையை முறுக்கினர்.

ஃ



கலெக்டர் ஆபீஸ் பிரதம குமாஸ்தா ஜப்தி செல்லாதென்று எதிர்த்தார்.

ஒருவனைப்பற்றிக் கேவலமாய் நினைப்பதைவிட, உயர்வாக நினைத்து அவன் குணங்களை அறிவதே நன்மையைத் தரும்.

சாமுவின் தர்ம வாசகசாலையை ஜப்தி செய்யவும் சாமுவைக் களவுக் குற்றத்திற்காக வாரண்டில் பிடிக்கவும் முயன்றார். சாமு பலமுறை சிறைக்குச்சென்று பட்ட பாட்டிற்காக இரக்கமுற்று அவன் பெயரால் ஒரு தர்மவாசகசாலையை தமது சொந்தச் செலவில் கட்டி முடித்து ஏற்படுத்தியதேயன்றி, அவன் பணமுமல்ல, அவனைக் கண்டதுமில்லையென்று கலெக்டர் ஆபீஸ் பிரதம குமாஸ்தா கூறி ஜப்தி செல்லாதென்று எதிர்த்தார். கேசவ ராய்க்கருக்கு இது முதல் தோல்வி. அவனைக் களவு குற்றத்தில் சேர்த்ததற்கு மட்டும் வாரண்டு பெற்று எவ்வளவோ பிரயத்தனப்பட்டுத் தேடினார். அகப்படவில்லை, தான் கண் வைத்த செல்லமுத்து இருக்கிற இடமும் தெரியவில்லை. இவ்விருவரும் சேர்ந்துகொண்டு ஓடிவிட்டதாக எண்ணினார். ஆயினும் வெறுமனே இருந்துவிடவில்லை. ஐந்து திருட்டுக் கேசுகளில் சாமு சம்பந்தப்பட்டிருப்பதாகவும் இரண்டு கொலைகளில் அவன் முதல்வனாயிருந்து செய்துவிட்டு ஓடியதாயும், அதற்கான சாக்ஷிகளெல்லாம் சித்தப்படுத்திக் கொண்டு சாமுவை எந்த சமயமும் பிடித்துவிடத் தயாராயிருந்தார். ஆனால், சாமு அகப்படவில்லை. களவுபோன அவரது பணப்பெட்டியும் கிடைக்கவில்லை. இரண்டு வருஷங்களும் சென்றுவிட்டன.

ஃ

கேசவ ராய்க்கரின் நிலைமை இரண்டு வருஷங்களுக்கு முன்பு இருந்ததுபோல் இப்பொழுதில்லை; தம் வீட்டிலேயே நடந்த களவைக் கண்டு பிடிக்க முடியாததில் அவருக்கு மதிப்பு வெகுவாய்க் குறைந்துவிட்டது. இன்னும் மூன்று முக்கிய திருட்டுகளிலும் அவரது ஜம்பம் சாயவில்லை. ஒரு கொலைக்கேஸ் அநியாயமாய்க் கண்டு பிடிக்காமலே போயிற்று.* மற்றொரு அடிதடி வழக்கில் கைது செய்யப்பட்ட திருவனா

* இது வெட்டிக்குச் செய்து முடிக்கிறவேலை யென்று முணுமுணுத்துக் கொண்டு ஒருவருக்கு ஒரு காரியத்தை இனமாகச் செய்து கொடுத்தாலும், அந்த முணுமுணுப்புத் தொனியை மற்றவரிடமிருந்து அறிந்துவிட்ட நெஞ்சம் அந்த இனாம் வேலையால் மகிழ்ந்துவிடாது. அத்துடன் முணுமுணுப்புக்காரனின் குணத்தையும் தெரிந்துகொள்ளும்.

மிக்கக் கொடுமையாய் ஹிம்ஸித்து விட்டதாகக் கேஸ் ஏற்பட்டு ருஜுவாகியும் விட, அதன் பயனாக அவரைப் பழைய ஹெட் கான்ஸ்டேபிள் வேலைக்கு மாற்றித் தாழ்த்தி விட்டார்கள். துக்கத்தின் மேல் துக்கம்! சாமுவால் வந்த அதிர்ஷ்டம் சாமு மறைந்ததும் மலையேறி விட்டது! அவரது குமாரனை இருவருக்கு ஜாமீன் கையெழுத்திட்டுவிட, தொகையைப் பெற்றுக் கொண்ட அவ்விருவரும் காணாமல் போய்விட, அந்த நாலாயிரம் ரூபாய்களையும் கேசவநாயக்கரே செலுத்திக் குமாரன் சிறைக்குச் செல்லாதபடி மீட்க வேண்டியதாயிற்று. கடன்களும் அதிகரித்து அந்த ஹிம்ஸையை சகிக்க முடியாததாயிற்று. என்ன செய்வதென்று யோசித்து, தமது பழங்காலத்து நேசரான பண்ணை ஸ்ரீநிவாஸப் பிள்ளையை நினைத்துக்கொண்டு அவரிடம் உதவி பெறுவதற்காகப் புறப்பட்டுச் சென்றார்.

ஃ

கற்புலக்ஷண உத்தமியின் கழுத்தைத் திருகிக் காஷ்டத்திலேற்றிச் சுடுசாம்பலாக்கிக் கரைத்துவிட்ட பண்ணை ஸ்ரீநிவாசப்பிள்ளையின் நிலைமை இப்பொழுது எப்படி? மகாராஜனுக்குப் பெண்களுக்கென்ன குறைவா? ஒருத்தி போனதும் மற்றொருத்தியை அந்த வருஷத்திலேயே விவாகம் செய்து கொண்டார், அவளிடமாக மூன்று பிள்ளைகளும் பிறந்தன. ஆனால் வந்தவள் முந்திய உத்தமி போலில்லை. மூத்தவள் தாரம், இளையவள் பாரம் என்பது வெகு சீக்கிரத்தில் பிள்ளையவர்களுக்குத் தெரிந்துவிட்டது. சதா சிடுசிடு, கடுகடு, என்றே விளங்கினாள். கோபம் வந்து அடிப்பின், இன்னும் அடியடா பாவி, என்று எதிர்த்துக்கொண்டு எவ்வளவு அடிகளையும் தாங்கவல்லவளானாள். அவளது கழுத்தை நெருக்குவதற்கு முடியவில்லை, ஒருதரம் அதற்காகவே முயன்றதில் பிள்ளையவர்களின் கழுத்தையே அவள் முதுகு பக்கம் திருப்பிவிட, பிள்ளையவர்களும் சரிக்குச் சரியான மனுஷியென்று அடங்கிவிட்டார். அவள் மட்டுமா? வீட்டில் அவளுடைய தம்பி தமயன்களும் அவளுக்குத் துணையாக ஸ்திரவாசமாயிருந்தார்கள். இதற்குக் குழந்

சிறு வயது முதலே நற்குண நற்செய்கைகளை நினைத்து நடக்கப் பார்த்தால் பெரியவர்களானபோதிலும் அந்த நற்குணங்களுடனே வாழமுடியும்.

தையும் தாயுமாகிவிட்டவே பிள்ளையவர்களின் அதிகாரம் இன்னும் சுருங்கிற்று. அவர் வைத்ததே சட்டம், சொன்னதே சா ஸிட்டமாக இருந்தது.

ஃ

பிள்ளையவர்களின் அந்தஸ்துக்குத் தகுந்தபடி இரண்டு தாசிகள் உதயமாயினர். 'பிரதர்'களின் கூட்டமும் பெருகிற்று. கடனும் அத்துடன் கொஞ்சம் ஏறிற்று, அடுத்த வருஷத்து அறுவடையில் எல்லாக் கடன்களையும் ஒழித்துவிடுவதென்றிருந்தார். அதற்குள் ஆடிமாதம் பிறந்தது. எங்கும் வெள்ளப்பாழாகி பிள்ளையவர்களின் நிலங்கள் யாவும் இரண்டு ஆள் உயரத்துக்கு மண்ணடித்துப் போயிற்று. சர்க்கார் உதவி ஏதாவது கிடைத்து நிலங்கள் சீர்படுமென்று எதிர்பார்த்தார். அந்த ஆசை வீணானது. வீட்டிற்கு கடன் வாரண்டுகள் வந்துவிட்டன. சிறைக்குச் செல்ல இஷ்டமில்லாததால் இருந்த சொத்துக்களை மனைவியின் பேருக்கு எழுதி வைத்துக் கடன் சிலவற்றையும் தீர்த்துத் தொலைத்தார். பத்திர ஆதாரமில்லாமல் பெரிய மனுஷராயிற்றே யென்று நம்பிக் கொடுத்தவர்களின் வாயில் மண்ணைப் போட்டுவிட்டார்!

ஃ


இப்பொழுது பிள்ளையவர்கள் தன் மனைவியின் கைச் சோற்றுக்கு எதிர்பார்க்க வேண்டிய காலமாய்விட்டது. போதாக்குறைக்கு ஐம்பா! அவருக்குக் குஷ்டரோகமும் தோன்றியது. கைவிரல்களும், கால்விரல்களும் கனத்த புண்ணாகி இரத்தமும் சீயும் வடிந்தன. அவரது அருமை நாயகி அவரிடம் நெருங்கிப்பேசக்கூட அசங்கிதப்படத் தொடங்கினாள்.

ஃ

அவள் பேருக்கே சகல சொத்துக்களுமான பிறகு அவர் ஒரு கூலியாள்தானே. 'திண்ணையில் கிடக்கிறதுதானே! வீட்டிற்குள் ஏன் வந்தாய்? குழந்தைகளுக்கும் அந்த நோய் தொத்திக்கொள்ளவா' என்று கேட்டதும், பிள்ளையவர்கள் மௌனமாய் வெளியிற்சென்று விடுவார்-இல்லாவிடில் அல்லது சற்று எதிர்த்துக்கொண்டாலும் அன்றைய அன்னத்திற்கே ஆபத்தாகிவிடும்,

ஃ

கேசவ நாய்க்கர் ஸ்ரீனிவாஸப் பிள்ளையைப் பார்க்க வந்த பொழுது அவர் தெருத்திண்ணையில் படுத்துக் கிடக்



கேசவநாய்க்கர் ஸ்ரீநிவாசப் பிள்ளையைப் பார்த்து திடுக்கிட்டு "இதென்ன அலங்கோலம்" என்றார்.

எவ்வளவுதான் தன் காரியார்த்தமாய் அன்புள்ளவர்களைப்போல் பசப்பிக் கடிதம் எழுதினும், அக்கடிதத்திலேயே அன்பற்ற தயவை பரப்பிரயோகங்களைக் காணலாம்.

றார். நாயக்கர் அவரைக்கண்டதும் திடுக்கிட்டு, 'இதென்ன' என்றார். அதற்கு பிள்ளை—'ஆமாம் நாயக்கரே! எல்லாம் முன் செய்த வினை; உத்தமியும் பதிவிரதையுமான என் முதல் மனைவியைக் கொன்று தொலைத்ததின் சாபம் இது. அவளது கொலையை உமது உதவியால் மறைத்துவிட்ட போதிலும் எங்குமுள்ள தெய்வத்தின் கண்ணைக் கட்டிவிட முடியுமா? அன்றியும், அந்த நிரபராதியும் யோக்கியனுமாகிய சாமுவை உமது சகாயத்தால் அநியாயமாகச் சிறைக்கு அனுப்பி அக்கிரமஞ் செய்தேனல்லவா? அந்தப் பாவமும், என் மனைவியின் சாபமும் சூழ்ந்துகொண்டு இப்போது என்னை இப்படி வதைக்கின்றன' என்று கூறிக் கண்ணீர் விட்டார். இது கேசவநாயக்கர் நெஞ்சைக் கனத்த வேதனைக்குள்ளாக்கிற்று. குற்றமுள்ள நெஞ்சு குறு குறு என்னுமே!

ஸ்ரீனிவாசப் பிள்ளைக்கு வியாதி என்று மட்டும் கேசவநாயக்கர் நினைத்துக்கொண்டார். அவருடைய பூர்வ சொத்துகள் இன்னும் கருங்கல்போல் கரையாமல் அப்படியே இருக்கின்றன வென்றும் எண்ணினாராதலால் தமது கஷ்டங்களை யெல்லாம் தெரிவித்து, எல்லாம் சாமுப் பயலால் வந்த வினை; அவனே பணப்பெட்டியை எடுத்துச் சென்றவன் என்று கூறி முடித்தார். இதைக் கேட்டதும் பிள்ளை கொதித்தெழுந்து, இன்னும் அந்த உத்தமனான சாமுவைத் தூஷிப்பீரானால் இன்னும் கேவல நிலைமையையே அடைவீர். அவனை அநியாயமாக உமது உயர் பதவிகளுக்கெல்லாம் ஒரு ஏணியாக உபயோகித்துக்கொண்டு காலம் முழுதும் சிறையிலேயே வைத்து அதிக அக்கிரமம் செய்து விட்டீர். தெய்வம் உடனே தண்டிப்பதில்லை. எவ்வளவு சுமக்க முடியுமோ அவ்வளவுக்கும் பாவமூட்டையை ஏற்றிக் கொள்ளும்படி நெடுக விட்டுக் கொடுத்துக் கடைசியில் ஒரேயடியாய் ஸர்வ நாச

மிக்க செல்வர்கள்தான், பரமஸாதுக்கள்தான். ஆனால், அருவருக்கத்தக்க சண்டாளத்தனமான ஈன செயல்களில் அடிக்கடி கை நனைத்து விடுகின்றனர். ஆனால் அதை உலகம் அறியாவாறும் காத்துக்கொள்கின்றனர். எனினும் கடவுளுக்கு மறைக்க முடியுமோ!

ப்படுத்தி விடுவது தான் எங்நம் கண்டுவரும் ஸம்பவம். அதிக தூரத்திற்குப் போவானேன்? உமது தற்காலப் பரி குறியான ஸ்திதியே அதற்கு சாக்ஷியாகும். மேலும் இன்னொன்றையும் நான் சொல்லக்கூடும். சாமு எப்பொழுதும் பிறர் துயரம் காணச் சகிக்க மாட்டாதவன். என்றால் என் மனைவிபடும் துன்பத்தை அவள் தாய் வீட்டிற் சொல்லி எத்தனையோ தடவைகளில் அழுதிருக்கிறேன். கடைசியில் என் மனைவி தன் தாயின் வீட்டிற்குத் தபாலில் போடும்படி ஒரு கடிதத்தை யவனிடம் கொடுக்க, அந்த சமயம் நான் அங்குவந்து அக்கடிதத்தைத் தரும்படி கேட்க, அதற்கு முன்னமே என்னையவன் கண்டுவிட்டு அக்கடிதத்தைத் தன வாய் வெற்றிலையோடும் சேர்த்துமென்று விழுங்கி விட்டான். அக்கடிதம் என்னிடம் சிக்கினால் என் மனைவி என்ன பாடு படுவாளோவென்று கலங்கி அவன் இப்படி மென்று வயிற்றுக்குள் தள்ளிவிட்டான். அத்தகைய தினகபாளுவா உமது பணப்பெட்டியை எடுத்திருப்பான்? ஒருபோதுமில்லை. தெய்வ சாக்ஷியாக இல்லை" என்று ஸ்ரீநிவாசபிள்ளை பெரிய பிரசங்கம் செய்தார்

ஃ

கேசவ நாயக்கருக்கு இந்தப் பிரசங்கத்தைக் கேட்டுச் சகிக்கத்தாளவில்லை; அவர் உடம்பு நெருப்பாய்ப்பற்றி எரிந்தது. சாமுவை உயர்த்துவது போல் உயர்த்தித் தன்னை மிகவும் இழிவாய்ப் பிள்ளையவர்கள் தாழ்த்திப் பேசுவதாக நினைத்தார். பிள்ளையவர்களின் ஒவ்வொரு சொல்லும் அவருடைய நெஞ்சைக் குத்தித்தொளைத்தது. தமக்குள் எழுந்த ஆத்திரத்தைக் அடக்கிக்கொண்டு, "நான் இப்பொழுது வந்ததற்கு என்ன சொல்லுகிறீர்கள், ஏதாவது சக்தியாநு சாரம் கொடுத்து உதவுங்கள்" என்று வெகு இரக்கமாய்க் கேட்டார். பிள்ளையவர்கள் தன்னிடம் ஒரு காசும் கிடையாதென்றும், தனது கஷ்டங்களையும் தற்கால நிலைமையையும் உள்ளதை உள்ளபடியே தெரிவித்துக் கையை விரித்து விட்டார். கேசவநாயக்கர் குனிந்த தலையுடன் வெறுங்கையாய்த் திரும்பும்படி நேர்ந்தது.

மூன்று வருஷங்களாகக் காணப்படாதிருந்த சாமு தனது பத்தினியுடனும் தனது கைக்குழந்தையுடனும் முருகன்பட்டிப் பாளையத்திற்கு வந்து தன் வீட்டு வாயிலில் வண்டியை விட்டிறங்கினான். அதற்கு முன்னதாகவே அங்கிருந்த தர்ம வாசகசாலையை அதைக்கட்டியவர் வேறொரு இடத்திற்கு மாற்றிவிட்டு, ஒரு குடும்பத்திற்கு வேண்டிய சாமான்களையும் அவ்வீட்டில் நிறைத்து வைத்திருந்தாராதலின், சாமு வண்டியை விட்டிறங்கியதும் அவனிடம் அவ்வீட்டின் சாவியைக் கொடுத்து "இந்தா உன் வீட்டை ஒப்புக்கொண்டு மகாராஜனாக வாழ்ந்திரு" என்று ஆசிர்வதித்தார். சாமு திரும்பி வந்துவிட்ட செய்தி அவ்வூர் முழுவதும் பரவவே ஒருபெரும் ஜனத்திரள் அவன் வீட்டைச் சுற்றிக்கொண்டு ஆரவாரித்து மங்களம் பாடியது.

ஃ

கேசவ நாய்க்கருக்கு இந்தச்செய்தி எட்டவே 'விட்டேனோ பயலை' என்று துள்ளிக்குதித்தார். அவன்மீது ஏற்கனவே சுமத்தப்பட்டிருந்த கொலை, களவுக்கேஸுகளின் கட்டையெடுத்துக்கொண்டு மாஜிஸ்டிரேட்டினிடம் சென்று வாரண்டு வேண்டுமென்றார். ஆயினும் கேசவநாய்க்கரின் அடாத செயல்களை யுணர்ந்திருந்த மாஜிஸ்டிரேட் ஜாமீன் மீது விடத்தக்கதான வாரண்டையே பிறப்பித்தார். இது நாய்க்கருக்கு மிக்க அதிருப்தியை விளைவித்ததாயினும் இதைக்கொண்டு நான் எவ்வளவோ செய்துவிடுவேனென்று சொல்லிக்கொண்டு முருகன்பட்டிப் பாளையத்திற்கு வந்து சாமுவை அந்த வாரண்டின்மேல் கைது செய்தார். அடா பாவி! ஒன்றும் அநியாயம் செய்யாதே என்று நாய்க்கரை அவ்வூராரனைவரும் தூற்றினர். சாமுவின் வீட்டைக் கட்டிய உத்தியோகஸ்தர் உடனே அங்கு வந்து சாமுவுக்குத் தக்க ஜாமீன் கொடுத்து நாய்க்கரை யனுப்பிவிட்டார், சாமுவைப் போலீஸ் கொட்டடிக்கு கொண்டுபோக நினைத்த நாய்க்கரின் எண்ணம் ஐயோபாவம்! நிறைவேறவில்லை.

அவரவரின் மனக்கஷ்டத்தை அவரவர் அறிவதுபோல் மற்றவர்களால் அறியமுடியவில்லை. அப்படி அறிந்திருந்தாலும் அறியாதவர்போலவே இருந்துவிடுவர்.

கேசவராயர் தமது வீட்டிற்கு வந்ததும் தபாற்கா ரன் பெரிய பார்ஸல் ஒன்றை அவரிடம் கொடுத்தான். அதை



பணப்பெட்டியின் பலகைத்துண்டுகளுடன் ஒரு கடிதமும் இருந்தது.

மனதில் ஒன்றும் வாக்கில் ஒன்றும் எழுதுவதில் ஒன்றுமா யிருப்பவனைத் திரிகாணசுத்தியா யிருக்கிறான் என்று உலகம் பேசு வது வழக்கம்.

பிரித்துப் பார்க்கையில் அவரது காணாமற்போன பணப்பெட்டியின் பலகைத் துண்டுகளாக இருந்தன. அதிலொன்றில் கேசவராயக்கரின் பெயரும் இருந்தது, அதைக் கண்டு பிரமிக்கையில் ஒரு பலகையுடன் சேர்த்துக் கட்டப்பட்டிருந்த கடிதமொன்றைக் கண்டு அதைப் பிரித்து வாசித்தார். அதில் பின்வரும் விஷயங்கள் காணப்பட்டன.

***

சிங்கப்பூர்

கேசவராயக்கரே! 7—8—**

நான் இனிப்பிழைக்க மாட்டேனென்றும் ஒரு வாரம் கூட இருப்பது நிச்சயமில்லையென்றும் வைத்தியர் சொல்லிவிட்டபடியால் உம்முடைய பணப்பெட்டியை அவ்வளவு சாமர்த்தியமாய்க் களவாடியவன் நான்தானென்பதை இப்பொழுது உமக்குத் தெரிவிக்கிறேன். அதை மெய்ப்பிக்கும் பொருட்டு உமது பணப்பெட்டியை உடைத்துப் பலகைகளாக அடுக்கிக் கட்டி இந்தப் பார்ஸலை அனுப்பியிருக்கிறேன். நீர் அக்கிரமத்தில் தேடிய திரவியங்களை நான் தர்மத்திற்கே பெரும்பாலும் செலவிட்டிருப்பதால் நீர் சந்தோஷப்படலாம். உமது திரவியத்தை நான் மனதார எனது சொந்த சொத்துபோல் அனுபவித்த நன்றியைக் காட்டும் பொருட்டு நான் இறந்ததும் அந்தச் செய்தியை உமக்குத் தந்தி மூலமாகத் தெரிவிக்கும்படியும் ஏற்பாடு செய்திருக்கிறேன். உமக்கு மட்டும் தந்தியல்ல; ஜில்லாக் கலெக்டருக்கும் நான் இறந்ததைத் தந்தியில் தெரிவிக்கும்படி செய்துவிட்டு, இந்தக் கடிதத்திற்குச் சரியான பிரதியொன்றையும் இத்துடன் அவருக்கு ரிஜிஸ்தரில் அனுப்பியிருக்கிறேன். இந்தக் கடிதத்தை உமக்கு நான் எழுதியதையும் என்னுடைய பூர்வ கதையையும் இங்குள்ளவர்கள் எவரும் அறியார். என்னை ஒரு தருமப்பிரபுவென்றே இங்குள்ளவர்கள் நினைத்திருக்கிறார்கள். கடைசியாக, என்னை நீர் கைதுசெய்ய முடியாமலே போய் ஏமாறி விட்டீரென்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இங்ஙனம்

உமது சொத்துக்களை அநுபவிக்கப்பிறந்த

ஜெயவீர—செல்வமுத்து.

இக்கடிதத்தைக் கேசவநாயக்கர் வாசித்து முடித்ததும் அவர் மனம் இருந்த நிலைமையை வாசகர்களே ஊகித்துக்கொள்ளலாம். சொல்லி வைத்தாற்போல் அதே நிமிஷத்தில் ஒரு தந்தி வர, அதில் செல்லமுத்துப்பிரபு இறந்துவிட்டதாக அதிக துயரத்தோடும் குறிப்பிட்டிருந்தது.

சாமுவின்மீது கொண்டுவரப்பட்ட வழக்கு தொடங்கிற்று. கேசவநாயக்கர் தமது பணப்பெட்டியைச் செல்வமுத்து எடுத்ததாகத் தெரிந்துவிட்டதாலும், தாம் அதை மறைப்பதற்கின்றித் தமக்கு வந்த கடிதம்போல் ஜில்லாக் கலெக்டருக்கும் ஒரு கடிதம் வந்துவிட்டதாலும், அக்குற்றத்தை அபாண்டமாய் சாமுவின்மீது சாட்டுவதற்கு முடியவில்லை. அதுமட்டுமன்று, சாமுவின்மீது முன்பு ஏற்படுத்திய கொலைகளவுக் குற்றங்களுக்கு சாக்ஷிகளாய் வந்து சொல்ல ஒப்புக்கொண்டிருந்தவர்கள் நாய்க்கருடைய பழைய உயர் பதவியபோது சம்மதித்தவர்களானதால் இப்போதைய அவரது தாழ்ந்த நிலையில் பொய்யாக வந்து சொல்ல அடியோடு மறுத்துவிட்டார்கள்! பொய் சாக்ஷி கூறும்படி தம்மிடம வந்து கேட்ட நாய்க்கரைச் சிலர் கண்டபடித் தூற்றியும் மரியாதை செய்தும அனுப்பினார்கள். கேசவநாயக்கர் தான் சாமுவின்மீது கொண்டு வந்த குற்றவழக்கில் ஒன்றைக்கூட ருசுப்பிக்கக் கூடவில்லை. ருசுப்பிக்க ஒரு சாக்ஷியும் கிடைக்கவில்லை. கேசவ நாய்க்கர் கோர்ட்டில் தத்தளித்து நின்றார்.

சாமுவின் பக்கத்து சாக்ஷியாக வந்த தமிழ் பண்டிதர் ஞானப்பிரகாசப் பிள்ளை பின்வருமாறு கூறினார்...சாமு என் பாடசாலையில வாசித்த மாணாக்கர்களில ஒருவன். சிறு பருவ முதற்கொண்டே அவன் புத்திசாலியாயும் குணசீலனாயும் இருந்து வந்ததை நான் அறிவேன். பிறகு எனக்கு உண்டான கஷ்டங்களால் பாடசாலையை மூடிவிட்டு, ஆங்கிலேய உத்தியோகஸ்தர்களுக்குத் தமிழும் தெலுங்கும் கற்பிப்பதில் என் ஜீவயத்தை நடத்தி வெளியூர்களிலேயே இருந்து வந்தேன்.

உடன்பாபற்றி உன அலபர்களிடம் உனக்கு விரோதமான வற்றைக்கூறி, உன்னிடமும் நேசமாயிருப்போரிடம், நீயும் அன்னாரிடம் கபடம் அறியாதவன் போலிருந்து ஜாக்கிரதையில் நில்.

3. ஒரு வியாசம் எழுதி வைத்திருந்து அது தவறிவிடின் அதைப்போல் எழுத இயலாது. எவ்வளவுதான் எழுதினாலும் முதலில் எழுதியதற்கு இணையாகாது. முன் எழுதியவைகளும் ஞாபகத்திற்கு வாராது.

4. இன்று பகல் முழுதுக்கும் நான் என்ன வேலை செய்தேன். எவ்வளவு உழைத்தேன், இன்னும் முடியாத வேலைகள் என்னென்ன பாக்கியிருக்கிறது என்று ஒவ்வொருவனும் பிரதி இரவிலும் நினைத்துப் பார்த்துக் கடவுளிடம் அன்றுதான் செய்த வேலைகளின் விவரத்தை ஒப்புவிக்கக் கடவன்.

5. சும்மா சும்மா இலவசத்தில் தின்றுகொண்டு வீட்டில் உட்கார்ந்திருப்போருக்கு நல்ல நினைவுகளும நற்செய்கைகளும் உண்டாவது அபூர்வம்.

6. பிறர்மீது அசங்கிதமான புகார்களையே சதா கூறிக்கொண்டிருப்பவன் அதைக் கேட்கும் பிறராலும் வெறுக்கப்படுவான். அவனுடைய இழிவான குணத்தைக் கண்டு அந்தப்பிறரும் இவனிடம் நெருங்காமல் ஒதுங்கிவிடுவர்.

7. தந்தைக்கு உபயோகப்படாத குமாரன் ஊருக்கும் உபயோகப்படமாட்டான். மற்றவர்களுக்குப் பயன்படுபவன்போல் காட்டுவதும் ஒரு கபட வேஷம்தான். கடைசியில் தானும் விருத்தியடைவது கஷ்டம்.

8. நல்ல நினைவுகள் நினைப்பவர்கள் நன்மையையே கண்டவர் கெட்ட நினைவுகளைக் கொண்டிருப்போர் கெடுதியையே அடைவர்,

9. நமக்கு அவசியமான வேலைகள் இருக்கையில், நமது நண்பர்கள் என்போர் நமது கண்ணுக்கு எதிர்படுவதேயில்லை, வேலைகள் தீர்ந்தபிறகுநம்மிடமிருந்து ஏதேனும் இலவசத்தில் பெற்றுப் போக நம்மைச் சூழ்கிறார்கள். இவர்களுக்கு ஒன்றைத் தருவதைவிட நெருப்பில் போடுவது மேல்.

10. சமயம் பார்த்து எய்த்து இரவலில் புஸ்தகம் பெற்றுப் போகிற சண்டாளர்கள்பிறகு பல தடவை கேட்டும் அதைக் கொண்டு வந்து தருவதேயில்லை. அவர்களின் வீடு தேடிச்செல்லினும் அகப்படுவதில்லை.

11. உண்மை யன்பினர்கள் காரணமின்றி அடிக்கடி கடிதம் எழுதார். போலிகளதான் தங்களை சநதேகியாதிருப்பதற்காக அடிக்கடி வரைவர்.

12. தன் நண்பனை நேரில் காணச்சென்றவன் சுயநலகுண வேறு பாட்டைக்கண்டு வந்தபிறகு கடிதமே எழுதுவதில்லை. அவ்வளவில் விலகிவிடுகிறான்.

13. ஒவ்வொரு தொழிலாளியும் தன் தொழிலை உயர்வாகவே சொல்லிக் கொள்ளுகிறான்.

14. ஒருவன் ஒன்றை விரும்பி ஒருவனிடம் போகிறான். போனகாரியம் முடிவதில்லை. அது முதல் அவனைப்பார்க்கப்போவதுமில்லை.

15. யோக்கியர்களுக்குத்தான் பலவித கஷ்டங்கள் வந்து நேர்கின்றன. யோக்கிய மற்றவர்கள் சுகமாகவே காலந்தள்ளுகிறார்கள்.

16. சிலரை விவாகத்திற்கு அழைத்தப்பிறகு அவர்களைநூறு பேர் மத்தியில் அவமதிக்கின்றனர்.

17. ஒருவர் தாம் செய்த தீச்செய்கையை அவரே தன்னை மறந்து வாய்தவறி சொல்ல நேர்ந்து விடுகிறது.

18. ஒருவனது அநுபவங்கள் மற்றவர்களுக்கும்பொருந்தியதாய் விடலாம்.

19. ஒரு பெண்ணுடன் பேசுவதற்கு அவளது கணவன் அருகிலுள்ள சமயம் கிட்டுவதலன்றி மற்றப்படி சிலர்பேசுவதேயில்லை.

20. ஒருவரைபெ சுதமென நினைத்தவன் அந்த ஒருவருக்குப் பிறகு பல கஷ்டங்களையும் யடைகிறான்.

21. தன் சம்பாதனை தனது பத்து நாட் செலவுக்குக்கூடக் காணாமல் கஷ்டப்படுவோன், தனது ஆடம்பரச் செலவுகளை மட்டும் அடக்கக்கூடாதாம்.

22. ஒரு அல்ப மனிதனும் சில சமயத்திற்கு உதவுவான். அவன் தயவைநாடி இதற்குமுன் நாம் அலைந்தும் இருப்போம். இனியும் அவனிடம் போய் அலையவும் வரும், ஆதலின் எவரையும் அலக்ஷியம் செய்துவிடக்கூடாது.

23. காமியத் தாசிமகள் கற்புகொள்வதும், குடும்பத்தில் பிறந்தோர் நன்னெறிமீறுவதும் கர்ப்பவாசத்தில் அமைந்த குணம்போலும்.

24. காலமுழுதும் பிறருக்கு உழைக்கிறான். அவனுடைய அந்தியத்திலோ அந்தப் பிறரை அவனருகில் இருக்கக் காண முடிகிறதில்லை.

25. பிரயாணம் சொல்லிக்கொண்டு பிரிகிற சிலர்மறுபடியும் உயிருடன் சந்திப்பதில்லை.

26. விவாகம் செய்வித்தனுப்பிய தன்பெண்ணை மறுபடியும் முகம் காணாமலே தந்தை கண்மூடுகிறான்.

27. பெண் குழந்தைகளைப் பெற்றோர் பூர்வஜென்மத்தில் அதிகக்கடன்பட்டு அக்கடனைத்திருப்பித்தராதவர்களாயிருக்கலாம்

28. பெண்ணையும் கொடுத்து நகைகளையும் கொடுத்து, மேல்வரிசைகளையும் கொடுத்து, மருமகனின் காலில்வீழ்ந்தும் கடுகத்தனை விஸ்வாசமும் காணோமே தேவா!.

29. பெரியோர்களைத் தரிசித்து அவர்களுடன் குலாவுவதற்குப் பூர்வஜென்மத்தில் பாக்கியம் செய்திருந்தால்தான் முடியும்

30. பிரசித்திபெற்றவர்களின் குழந்தைகள் அந்தப் பிரசித்தியை தாங்களும் பெற முயல்வதில்லை. முயல்வோர் பதினாயிரத்திலொருவரே.

31 கொண்டவனும் கொடுத்தவனும் சண்டையிட்டால் மூன்றாவது மனிதன் நுழைய இடமுண்டாகிறது. அவனுக்கு நல்ல விருந்தும் நடக்கிறது.

32. ஒரு பெண் தான் மதிக்கப்படவேண்டுமானால் தன் மாமனார் மாமியாரை மதிப்பதிலிருந்தே உண்டாக வேண்டும்.

33- ஒருவனுடைய உதவிகளை பலமுறை பெற்றிருந்தாலும். இனி அவன் உதவி செய்யானென்றறிந்ததும், அவனை அலக்ஷியமாய் நினைத்துத் தூற்ற ஆரம்பிக்கிறார்கள்,

Printed at the Raju Press, "Jagannadha Baugh" Saidapet,
and Published by S. G. Ramanujalu Naidu at 617,
M[illegible] St, Srirangam, Trichinopoly. Dist.